# வரலாற்று நோக்கில் தண்ணீர்ப்பந்தல்

**முனைவர் ஜெ. ஆர். சிவராமகிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, ஆத்தூர்

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
ISSN: 2454-3993

## முன்னுரை

கோடைகாலங்களில் மானுடத்திற்கும், விலங்கினத்திற்கும் ஏற்படும் நீர் வேட்கையைப் போக்குவதற்காக, தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்படுத்துவது சிறந்த அறமாகக் கொண்டவர்கள் பண்டையகால மக்கள். ஆதனால்தான் சங்க காலத்தைச் சார்ந்த சமண காப்பியங்களான சீவகசிந்தாமணி, மணிமேகலை போன்றவற்றில் தண்ணீர்ப்பந்தல்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கி.மு மூன்றாம் நூற்றாண்டில் வடஇந்தியாவை ஆட்சி செய்த மாமன்னன் அசோகர் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்ததைத் தமது கல்வெட்டு ஆணையில் பெருமையாகக் குறிப்பிடுகின்றார். இவர் பௌத்த மதக்கோட்பாடுகளை முழுமையாகப் பின்பற்றியவர். இதன் மூலம் சமணம், பௌத்த மதங்கள் தண்ணீரப்பந்தல்களின் அவசியத்தை தர்மக்கோட்பாட்டுடன் ஐக்கியப்படுத்திக் குறிப்பிடுவது ஆய்விற்குரிய ஒன்றாக உள்ளது. எனவேதான் இக்கட்டுரை தண்ணீர்ப்பந்தல்களின் தோற்றத்தினையும் அதன் காலப்பரிமாற்றங்களையும் ஆய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தண்ணீர்ப்பந்தல் ஏற்படுத்த உகந்த மாதம்

மக்களின் தாகம் தீர்க்கும் தண்ணீர்ப்பந்தல்கள் எம்மாதங்களில் ஏற்படுத்துவது என்ற நடைமுறைச் சட்டத்தைப் பண்டையகாலக் கல்வெட்டுக்களில் காணமுடிகிறது. உதராணமாக உத்திரமேரூரில் உள்ள ஏரிவாரிய பெருமக்கள் பங்குனி மாதம் உத்திரநட்சத்திரம் தொடங்கி, கார்த்திகை மாதத்தின் கார்த்திகை நட்சத்திரம் முடிய அதாவது எட்டு மாதங்கள் கட்டாயமாகத் தண்ணீர்ப்பந்தலமைத்து அதனைப் பராமரிக்க வேண்டுமென்ற கட்டளையின் வரையறையை உத்திரமேரூர் கல்வெட்டில் காணமுடிகிறது.

## தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்பட்ட இடங்கள்

தண்ணீர்ப்பந்தல்கள் மக்கள் அதிகம் கூடும் இடங்களான கோயில்கள், பொது மண்டபங்கள், திருவிழாக்காலங்களில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தல்கள் மற்றும் விலங்குகளுக்கென உருவாக்கப்பட்ட சிறப்பு தண்ணீர்ப்பந்தல்கள் போன்றவற்றைப் பற்றி எழுத்தாவணங்களில் காணமுடிகிறது. மக்கள் செல்லும் பெருவழிகளின் அருகேயும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்ததையும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

**முதல் தண்ணீர்ப்பந்தல் கல்வெட்டு**

மௌரிய பேரரசை கி.மு 269 முதல் கி.மு 232 வரை ஆட்சி செய்த அசோகர், கலிங்கப்போருக்குப் பிறகு புத்தமதத்தைப் பின்பற்றி தர்மக்கோட்பாடுகளில் அதீதப் பற்றாளனாக விளங்கினார். இதை அவரது கல்வெட்டு ஆணைகள் மூலம் அறியமுடிகிறது. அசோகரது தர்மக்கோட்பாடுகளைப்பற்றி குறிப்பிடும் ஏழாவது கற்றூண் ஆணையில் சாலைகளில் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் நிழல்தரும் ஆலமரங்களை நட்டிருக்கிறேன். மாந்தோப்புகளை வைத்திருக்கிறேன். அரைக் கோசிற்கு (ஒன்றே கால் மைல் தொலைவு) ஓரிடத்தில் கிணறுகளை வெட்டிவைத்துள்ளேன்.சத்திரங்களும் கட்டப்பட்டுள்ளன. மாந்தருக்கும், விலங்குகளுக்கும் வசதியாக ஏராளமான தண்ணீர்ப்பந்தல்கள் பலவிடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன் என்ற செய்தியைகூறுகிறது. மேலும் இந்தியாவிலேயே தண்ணீர்ப்பந்தல்களின் உருவாக்கத்தை வலியுறுத்தும் முதல் கல்வெட்டு இதுவாகத்தான் இருக்கமுடியும். சாலைகளில் பயணிக்கும் மக்கள், விலங்குகள் மீது அசோகருக்கிருந்த தன்னலமற்ற மனிதத்தின் வெளிப்பாடே இந்த அறச்செயலுக்கு காரணமாக அமைந்துள்ளது.

**சங்க இலக்கியத்தில் தண்ணீர்ப்பந்தல்**

சங்க இலக்கியங்களில் தண்ணீர்ப்பந்தல்களின் அமைப்புகள் பற்றி அறியமுடிகிறது. ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் கச்சிமாநகர் புக்ககாதையில் காஞ்சிமாநகரத்தின் வீதியில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப்பந்தலின் சிறப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது, "அகில் முதல் புகைத்து, நிறைந்த பந்தல் தசும்பும் வார்நீரும், என்ற பாடல்வரியில் தெருக்களில் அமைக்கப்பட்டிருந்த பந்தல்களில் மண்குடங்களில் தண்ணீர் நிரப்பப்பட்டிருந்தது, அப்பந்தல் முழுவதும் அகில் மனம் கமழ்ந்ததாகவும் குறிப்புள்ளது. இதன்மூலம் காஞ்சி மாநகரத்தில் இருந்த தண்ணீர்ப்பந்தல்கள் சுகாதாரத்துடன் இருந்தது எனலாம். சீவசிந்தாமணியில் ஏமாங்கதநாட்டின் சிறப்பைப் பற்றிக் கூறும்பொழுது அந்நகரில் அமைக்கட்டிருந்த தண்ணீரப்பந்தலின் வடிவமைப்பைப் பற்றிக் குறிப்பிடுவது வியப்பளிப்பதாக உள்ளது. அதாவது வெப்பமில்லாத கருநெல்லி, தான்றி மரங்களால் சூழப்பட்ட சுனையில் இருந்து காலை நேரத்தில் எடுத்துவரப்பட்ட குளிர்ச்சி பொருந்திய தண்ணீர், குடங்களில் நிரப்பப்பட்டு வாசனைமிக்க மலர்கள், சந்தனமிட்டிருந்ததை "வெப்புஇல் முப்பழச் சுனைத் தலைத் தண்ணீர்மலர் அணிந்து சந்தனம்செய் பந்தரும்" என்ற பாடல் வரியால் உணரமுடிகிறது. கருநெல்லி, தான்றி மரங்கள் மருத்துவ குணம்மிக்க மரங்களாகும். மனித உடலை அழியா நிலைக்கு இட்டுச்செல்லும் தன்மை கருநெல்லிக்கு உண்டு. இம்மரங்களால் சூழப்பட்ட சுனையிலிருந்து எடுக்கப்பட்ட தண்ணீர் முற்றிலும் மருத்துவ குணம்மிக்கது. இதனை அருந்துவோர் ஆரோக்கியத்துடன் இருப்பர். இங்கு மக்களின் ஆரோக்கியம் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

**பல்லவர்காலத் தண்ணீர்ப்பந்தல்**

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான அப்பூதியடிகள் சோழநாட்டில் உள்ள திங்களூரில்பிறந்தவர். கி.பி ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்த இவர், அப்பர் சுவாமிகளின் சமகாலத்தவராவார். சிறந்த சிவபக்தரான இவர் திங்களூருக்கு வரும் சிவனடியார் மற்றும் வறியோர்களுக்கெனப் பல அறச்செயல்களை செய்துவந்தார். அப்பூதியடிகள் திருநாவுக்கரசர் மீதுகொண்ட பற்றினால் தாம் நிறுவிய அனைத்து அறச்சாலைகளுக்கும் திருநாவுக்கரசர் என்ற பெயரையே சூட்டியிருந்தார். ஒருமுறை திருநாவுக்கரசர் திங்களூருக்கு வந்தபொழுது தமது பெயரில் அமைக்கப்பட்டிருந்த அறச்சாலைகள் மற்றும் தண்ணீர்ப்பந்தல்களைக் கண்டு வியப்புற்றதை,

**“குளம் நிறைந்த நீர்த் தடம்**
**போல் குளிர் தூங்கும் பரப்பினதாய்**
**வளம் மருவும் நிழல் தரு**
**தண்ணீர்ப் பந்தர் வந்து அணைந்தார்”.**
**“ஈரில்பெருந் தண்ணீர்ப் பந்தரில்**
**நும் பெர் எழுதாதே**
**வேறு ஒரு பேர் முன் எழுத**
**வேண்டிய காரணம்என்கொல்”.**

“வளம் தருகின்ற நிழல் தண்ணீர்ப் பந்தரும”, எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. மேற்கண்ட பாடல் வரிகளின்மூலம் அக்காலத்தில் தண்ணீர்ப்பந்தல்களில் பெயர் எழுதப்பட்டிருந்ததையும், அவை குளிர்தரு நிழலுடன் சுத்தமாக இருந்ததையும் அறிய முடிகிறது. மேலும் தண்ணீர்ப்பந்தல்கள் அமைப்பதைத் தலையாய அறமெனப் பெரியபுராணம் சுட்டுவது சிறப்பு வாய்ந்த ஒன்றாக உள்ளது. பல்லவ மன்னன் முதலாம் பரமேஸ்வர்மன் (கி.பி.670 – 700) வெளியிட்ட கூரம் செப்பேட்டில் அவ்வூரில் உற்பத்தியாகும் பொருட்களின்மூலம் பெறப்பட்ட வரியில் 25 பங்கில் ஒரு பங்கு பாரதம் வாசிக்கும் மண்டபத்தில் அமைக்கப்பட்டிருந்த முழுநேரத் தண்ணீர்ப்பந்தலின் பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்டதை “கூரத்து மண்டகத்துக்கு தண்ணீர்க்குந் தீக்கும் ஒரு பங்காகவும்” என்ற வரியின் மூலம் அறியமுடிகிறது. இதில் இரவில் ஏற்றப்படும் விளக்கிற்கும் சேர்த்து நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது இரவு, பகலென முழுநேரமும் மக்களின் தாகம் தீர்க்கும் பணி தடையின்றி செயல்பட நிரந்தர நிதி ஒதுக்கப்பட்டிருப்பது மனிதமையத்தின் உச்சம்.

**சோழர்காலத்தில் தண்ணீர்ப்பந்தல்கள்**

பல்லவர் ஆட்சிக்குப் பிறகு தமிழகத்தில் ஏற்பட்ட சோழர் ஆட்சியில் தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்ததைக் கல்வெட்டுத் தரவுகள் குறிப்பிடுகின்றன. பல்லவர் காலத்தைப் போன்றே சோழர் காலத்திலும் தண்ணீர்ப்பந்தல்களுக்கு பெயர் சூட்டும் வழக்கம் இருந்துள்ளது. குறிப்பாக மன்னர், அரசு அதிகாரி, சமானியமக்கள் போன்றோர் தங்களது பெயரில் தண்ணீர்ப்பந்தல்கள் ஏற்படுத்தியதை கல்வெட்டுக்கள் கூறுகின்றன. கன்னியாகுமாரி மாவட்டம் அகத்தீஸ்வரம் ஊரில் உள்ள இரண்டாம் இராஜராஜனின் முப்பத்தி ஒன்றாவது ஆட்சியாண்டு கல்வெட்டில் முதலாம் இராஜராஜசோழனின் பெயரில் “செயங்கொண்ட சோழன் தண்ணீர்பந்தல்” அமைக்கப்பட்டிருந்தது. திருவண்ணாமலை மாவட்டம் உக்கல் கிராமத்தில் புவனிமாணிக்க விண்ணகர் என்ற பெருமாள் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராஜராஜசோழனின் இருபத்தி ஒன்பதாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் “ஸ்ரீராஜராஜன் தண்ணீர பந்தல்” என்ற குறிப்பு உள்ளது. நாங்குநேரி வட்டத்தில் உள்ள தளபதிசமுத்திரம் என்ற ஊரில் உள்ள கல்வெட்டில் “வேளான் சாத்தன் திருக்கொட்டாற்று இராசக்கர் பேரால் நாட்டாற்றுப் பொக்குப்பெரும் பழஞ்சி எடுப்பித்த இராசகத்தண்ணீர் பெரும்பந்தல்” பற்றிய கல்வெட்டுக் குறிப்பைக் காணமுடிகிறது. இதன் வாயிலாகத் தண்ணீர்ப்பந்தல்களுக்கு பெயர் சூட்டும் வழக்கம் பல்லவர் காலத்திலிருந்து சோழர் காலத்திலும் தொடர்ந்தது.

கி.பி.845 முதல் கி.பி.1279 வரை தமிழகத்தில் ஆட்சிசெய்த சோழப் பேரரசர்கள் கோயில்கள், மக்கள் கூடுமிடங்கள், பெருவழிச்சாலைகள், மடங்கள், சத்திரங்கள், சோலை சூழ்ந்த இடங்களில் தண்ணீர்ப்பந்தல்கள் அமைத்திருந்ததைக் கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன. திருச்சி மாவட்டம், திருச்செந்துறை சந்திரசேகரர் கோயிலில் உள்ள முதலாம்பராந்தகச்சோழனின் இருபதாவது ஆட்சியாண்டு கல்வெட்டில் “இவ்வூர்க்கல்லம்பலத்து இருந்த ஆற்றுத் தண்ணிறட்டுவதாக் குடுத்த”

எனவும் இதேமாவட்டத்தில் உள்ள திருப்பாலத்துறை தாருகாவனேஷ்வரர் கோயிலில் உள்ள முதலாம் இராஜராஜ சோழனின் கல்வெட்டில்" "இவ்வம்பலத்துக்கு தண்ணீரரட்டு வார்க்கும் இராவிளக்கெரிய" எனவும் உள்ளன. தஞ்சை மாவட்டம் செந்தலை சுந்தரேஸ்வரர் கோயிலில் உள்ள ஆதித்தசோழனின் எட்டாவது ஆட்சியாண்டு கல்வெட்டில் இவம்பலத்து "கொடைமா தண்ணீர் அட்டுவானுக்கு நிலம் எட்டு மா" வழங்கப்பட்டதையும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள உத்திரமேரூர் கும்பேஸ்வரர் கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டு கல்வெட்டில் "எம்மூர் பிராமணிமண்டபத்தின் முன்பு தண்ணீர்பந்தல் வைத்தட்டு ஆட்டாண்டுதொறும்" எனவும், காஞ்சிபுரம் மாவட்டம் செவ்வலிமெடு கிராமத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலில் சகலலோக சக்கரவர்த்தியான வென்று மண்கொண்ட சம்புவராயரின் இருபத்தி எட்டாம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டில் "இத்தண்ணீர்ப்பந்தலுக்கும் மடத்துக்கும் சேர்த்து நிரந்தர வைப்பு வழங்கப்பட்டதையும், கன்னியாகுமரி அருகே உள்ள குமரிகழிக்குடியில் உள்ள ஐயப்பன் வேதியின் சாத்தன் கோயில் திருச்சுற்றின் தென்புறத்தில் உத்தமசசோழப் பேரேரியின் கீழ்க்கரை வழியாக மேற்கு நோக்கிச் செல்லும் பெருவழியில் தண்ணீர்ப்பந்தல் அமைக்கப்படிருந்ததையும், திருவண்ணாமலை மாவட்டம் உக்கல் கிராமத்தில் உள்ள விஷ்ணு கோயிலில் முதலாம் இராஜராஜசோழன் காலத்தில் மேலைப்பெருவழியில் தண்ணீர்ப்பந்தல் இருந்ததையும் அக்கால கல்வெட்டுக்களின் வழியே அறிய முடிகிறது. சோழர்காலத்திய தண்ணீர்ப்பந்தல்கள் பன்னிரெண்டு கோல் நீளமும், பதினோருகோல் அகலமும் உடையதாக இருந்தன. தண்ணீர்ப்பந்தல் அமைந்த இடங்களில் பயன்தரு மரங்களை நடவும், பந்தலைச் சுற்றி வேலி அமைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தண்ணீர்ப்பந்தலுக்கு தேவையான தண்ணீர் ஆறு, கிணற்றிலிருந்து கொண்டுவரப்பட்டன என்ற குறிப்புகளும் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது.

#### தண்ணீர்ப்பந்தல் சமைத்தோர்

அமைச்சர்கள், அரசு அதிகாரிகள், அரசனின் பணிமனை மக்கள், வேதியர், வணிகர்கள் போன்றோர் தண்ணீர்ப்பந்தல் அமைத்து மக்கள் பணி செய்துள்ளனர். கி.பி. 1044 ஆம் ஆண்டு முதலாம் இராஜேந்திர சோழன் இறந்தான். இவனது மனைவி வீரமாதேவியும் உடன் உயிர்நீத்தார். காஞ்சிபுரம் அருகேயுள்ள பிரம்மதேசம் என்னும் ஊரில் உள்ள கல்வெட்டில் இராஜேந்திர சோழன், வீரமாதேவி ஆகிய இருவர் உயிர்கட்கும் நீர்வேட்கை தணிதற்பொருட்டு இவ உடன் பிறந்தானாகிய சேனாதிபதி மதுராந்தகன் பரகேசரி மூவெந்தவேளான் என்பவன் தண்ணீர்ப்பந்தல் நிறுவியதைக் கூறுகிறது. செவ்வலிமேடு கிராமத்தில் உள்ள கைலாசநாதர் கோயிலில் சகலலோக சக்கரவர்த்தியான வென்று மண்கொண்ட சம்புவராயரின் (கி.பி. 1322 – 1339) இருபத்தியெட்டாம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டில் ஆற்பாற்கிழான் என்ற அரசு அதிகாரி இவ்வூரில் தண்ணீர்ப்பந்தலமைத்து அதற்கு தடையில்லாது தண்ணீர் வழங்க நிரந்தர வைப்பாக மனை வழங்கியுள்ளதை "தண்ணீர்பந்தலுக்கு தண்ணீர் வைக்கும் பிராமணர்களுக்கு... மனை இரண்டு விட்டு" என கல்வெட்டு சுட்டுகிறது. உக்கலில் உள்ள முதலாம் இராஜராஜசோழனின் இருபத்து ஒன்பதாம் ஆட்சியாண்டு கல்வெட்டில் இதே ஊரைச் சார்ந்த கண்ணன் ஆருரான் என்ற மன்னனின் பணிமகன் உக்கல் வழியாகச் சென்ற மேலைப்பெருவழியில் கிணறும் தொட்டியும் அமைத்து ஆண்டுதோறும் தண்ணீர் தருவதற்கும், கிணறு மற்றும் தொட்டியைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் நெல் தானம் வழங்கியதை அறிய முடிகிறது.

#### பராமரிப்பு மற்றும் ஊதியம்

தண்ணீர்ப்பந்தல்களைப் பராமரிப்பதற்கென்று தனியாகப் பணியாட்கள் நியமிக்கப்பட்டிருந்ததையும் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. கடலூர் மாவட்டம், உடையார்குடி சந்திராதித்தவர் ஆழ்வார்

கோயில் முன்பு தண்ணீர் அட்ட மூவாயிரத்துனூற்றுவன் என்னும் பிராமணன் பணியாளனாக நியமிக்கப்பட்டதைக் காணமுடிகிறது. இதேபோன்று செவ்வலிமேடு கிராமத்தில் அமைக்கப்பட்ட "சாலைக்கிணற்று தண்ணீர்ப்பந்தலுக்கு தண்ணீர் வைக்கும் பிராமணற்கு" என்ற கல்வெட்டு வரியில் தண்ணீர்பந்தலுக்கு நீர்அட்டும் உரிமை பிராமணர்களிடம் இருந்துள்ளதை உணரமுடிகிறது. உத்திரமேரூர் கல்வெட்டில் இவ்வூர் ஏரிவாரிய பெருமக்களே இப்பகுதியில் இருந்த தண்ணீர்ப்பந்தல்களை நிர்வகித்ததாகச் சுட்டுகிறது. சோழர் காலத்தில் தண்ணீர்ப்பந்தல்களின் பராமரிப்பு பிராமணர்களிடம் இருந்தது எனலாம்.

## இரவில் செயல்பட்ட தண்ணீர்ப்பந்தல்கள்

திருச்சி மாவட்டம் திருப்பாலத்துறை ஆதிமூளநாதர் கோயில் அம்பலத்தில் வைக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தலில் இரவில் விளக்கெரிக்க எண்ணெய் நானாழிக்கு நெல் தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் தரையை மெழுகித் தூய்மை செய்யவும் தண்ணீர்ப்பந்தலுக்குத் தேவையான மட்பாண்டங்கள் தடையின்றி வழங்க குசவனுக்கு நிரந்தர இருப்பாக நெல் தானமாக வழங்கப்பட்டுள்ளதையும் கூறுகிறது. இதனால் தண்ணீர்ப்பந்தல் இரவு, பகல் பேதமின்றி நிலைத்து இயங்கியது. இதேபோன்று பாண்டியன் கோமாறஞ்சடையனின் முப்பத்தி ஐந்தாவது ஆட்சியாண்டு கல்வெட்டில் தண்ணீர்ப்பந்தலுக்கு இரவு நேரங்களில் விளக்கெரிக்க நிரந்தரவைப்பு வழங்கப்பட்டதையும் காணமுடிகிறது. தண்ணீர்ப்பந்தலைப் பராமரிக்க வழங்கப்படும் நிலத்தினை "பானிய விர்த்தி" எனக் கல்வெட்டுக்கள் சுட்டுகின்றன். தண்ணீர்ப் பந்தலின் பராமரிப்பிற்காக நிலம், நெல், பொன் முதலியவை நிரந்தர வைப்பாக வழங்கப்பட்டது ஆய்விற்குரிய ஒன்றாகும்.

## பிற்காலத் தண்ணீர்ப்பந்தல்

கி.பி. 1464 முதல் கி.பி 1521 வரை செஞ்சிய தலைநகராகக்கொண்டு ஆட்சிசெய்தவர் வேங்கடபதியாவர். இவரது சகோதரி வேங்கட்டம்மாள் என்பவர் கடலூர் மவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம்,வெங்கடாம்பேட்டையில்தண்ணீர்ப்பந்தல் ஒன்றை நிறுவியுள்ளார். சிதம்பரத்தில் இருந்து வெங்கடாம்பேட்டை வழியாக திருவதிகை, காஞ்சிபுரம் செல்லும் பெருவழியில் அமைக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தலின் சுவடுகளை இன்றும் காணமுடிகிறது. வெங்கடாம்பேட்டை கிராமத்தின் வடக்கு பகுதியில் உள்ள சத்திரம் என்ற இடத்தில் சாலையின் அருகே பழமை வாய்ந்த கட்டடமும், அதன் மேற்கு பகுதியில் 144 செ.மீ நீளமும், 67 செ.மீ அகலமும், 60 செ.மீ உயரமும் சுமார் 307 லிட்டர் கொள்ளளவும் கொண்ட நீள்செவ்வக வடிவ கருங்கல் தொட்டியொன்றுள்ளது. அத்தொட்டியின் வெளிப்பகுதியில் "வேங்கட்டம்மாள் புண்ணியம் மோர் தண்ணிப்பந்தல்" என்றும் கல்வெட்டின் தெலுங்குப்பகுதி "வெங்கடேஸ்வரா நைப்புண்யா சத்ரம்" என்றும் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களின் நடுவே வைணவ சமயத்தின் சின்னமான திருமண் சின்னம் காணப்படுகிறது. இதன்மூலம் இப்பகுதியில் தாகம் தீர்க்கும்தண்ணீர்ப்பந்தலும், மக்கள் தங்கிச் செல்ல வசதியாக சத்திரமொன்றும் இருந்துள்ளதை அறியமுடிகிறது. தற்போதுள்ள வெங்கடாம்பேட்டை கிராமத்தை நிறுவியவர் வேங்கட்டம்மாள் ஆவார்.

## முடிவுரை

தண்ணீர்ப்பந்தல் அமைக்கும் அறப்பணி இந்தியவில் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தொடங்கி தற்காலம் வரை தொடர்ந்து வருவது ஆய்விற்குரியதாகும். தண்ணீர்ப்பந்தல்கள் அமைப்பதை உயரிய அறச்செயலாக சமண, பௌத்த, சைவ, வைணவச் சமயங்கள் சமமாக வலியுறுத்திக் கூறுவது சிறப்புவாய்ந்ததாகும். இப்பணியினை மதம் கடந்த மனிதத்தின் வெளிப்பாடாகவும் கொள்ளலாம்.

### குறிப்பு நூல் பட்டியல்

1. மணிமேகலை, காஞ்சிமாநகர் புக்கக்காதை, பக்கம்: 32
2. சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகம், பாடல் எண்: 75
3. கன்னியாகுமாரி கல்வெட்டுகள், மடலம் ஒன்று
4. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் III (Part -1)
5. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் VI
6. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் VII
7. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் VIII
8. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் XIII
9. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் XIV
10. தென்னிந்தியக் கல்வெட்டுகள், மடலம் XXI
11. தி.வை.சதாசிவப்பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு
12. TOPOGRAPHICAL LIST OF INCRIPTIONS FROM MADARAS PRESIDENCY, BY RANGACHARYA, No: 820 (290 – 1987)
13. அருண்மொழி ஆய்வுத் தொகுதி
14. ஆவணம், இதழ் - 20
15. கோவிந்தசாமி, அசோகரும் அவருடைய காலமும்.